සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Cristiyanity

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 9	**கிறிஸ்தவம்**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

01. தீய வழியில் வாழந்து கொண்டிருந்த மக்கள் மத்தியில் நல்வழியில் வாழந்து இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்.
1. தாவீது 2. சவுல் 3. தோவா 4. ஆதாம்

02. தாவீதின் மீது பொறாமை கொண்டு தாவீதை கொலை செய்ய சந்தர்ப்பம் தேடிய அரசன்.
1. பார்வோன் 2. சவுல் 3. ஏரோது 4. பிலாத்து

03. கானாவூர் திருமணம் எந்த நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது?
1. யோவான் 2. மத்தேயு 3. மாற்கு 4. லூக்கா

04. சரிபாத் விதவையாலும், காகத்தினாலும் போசிக்கப்பட்டவர்.
1. எலியா 2. எலிசா 3. நாத்தான் 4. அகபு

05. 'நீர் புறப்பட்டு போம், உம் மகன் பிழைத்துக் கொள்வான்' எனக் கூறியது,
1. பேதுரு 2. யோவான் 3. இயேசு 4. பவுல்

06. பேதுரு மரணத்தில் இருந்து உயிர்ப்பித்தது,
1. யவீரின் மகனை 2. நயீன் ஊர் விதவையின் மகனை
3. தபீத்தாவை 4. லாசருவை

07. புதிய ஏற்பாட்டில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை.
1. 12 2. 33 3. 27 4. 21

08. யூதரல்லாத இனத்தவரிடம் நற்செய்தியைக் கொண்டு செல்லுவதற்கான கடவுளின் அழைப்பைப் பெற்றவர்.
1. பேதுரு 2. பவுல் 3. யாக்கோபு 4. பிலிப்பு

09. பவுல் - நம்பிக்கையை எதற்கு ஒப்பிடுகிறார்.
1. மார்ப்புக்கவசம் 2. மிதியடி
3. கேடகம் 4. இடைக்கச்சை

10. இஸ்ரயேல் மக்களின் இரண்டாம் அரசன் யார்?
1. சவுல் 2. தாவீது 3. சாலமோன் 4. எரபொவாம்

11. திருத்தொண்டர்கள் எத்தனை பேர் காணப்பட்டனர்?
    1. ஒன்பது
    2. ஏழு
    3. பத்து
    4. பன்னிரெண்டு

12. "ஞானம் கடவுளின் கொடையாகும்" என்று கூறப்பட்டுள்ள நூல்,
    1. திருப்பாடல்
    2. பிரசங்கி
    3. கொரிந்தியர்
    4. நீதிமொழிகள்

13. எதிர்ப்பார்பில் ..... ஆருங்கள் துன்பத்தில் ..... ஆருங்கள் உரோமர் 12 : 12 வசனத்திற்கு அமைய இடைவெளிக்கு பொருத்தமானது,
    1. சந்தோஷம், தைரியம்
    2. மகிழ்ச்சி, பொறுமை
    3. மகிழ்ச்சி, தைரியம்
    4. சந்தோஷம், முயற்சி

14. மெபிபொசேத்து என்பவர் யாருடைய மகன்?
    1. சவுலின்
    2. தாவீதின்
    3. யோனத்தானின்
    4. சாலமோனின்

15. யூதர்கள் திருமண விழாக்களை,
    1. பதினொரு நாட்கள் கொண்டாடுவர்.
    2. ஏழு நாட்கள் கொண்ட நடுவர்.
    3. ஆறு நாட்கள் கொண்டாடுவர்.
    4. ஒன்பது நாட்கள் கொண்டாடுவர்.

16. ஏழு அப்பங்கள், சில மீன்களை கொண்டு இயேசு எத்தனை பேருக்கு உணவளித்தார்?
    1. 5000 பேருக்கு
    2. 7000 பேருக்கு
    3. 4000 பேருக்கு
    4. 3000 பேருக்கு

17. நல்லாயனுக்கு சிறந்த உதாரணம்.
    1. ஆமோஸ்
    2. மோசே
    3. தாவீது
    4. இயேசு

18. தபித்தாள் வாழ்ந்த ஊர்.
    1. எரிகோ
    2. யோப்பா
    3. கானாவூர்
    4. திபேரியா

19. "ஐயா! என் மகன் இறக்க முன் வாரும்" என இயேசுவிடம் கேட்டுக்கொண்டவர்.
    1. அரச அலுவலர்
    2. பேதுரு
    3. நயீம் ஊர் விதவை
    4. கொர்நேலியு

20. விசுவாசத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்,
    1. யாக்கோபு
    2. ஆபிரகாம்
    3. ஈசாக்கு
    4. ஏசா

(2 x 20 = 40 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயமானதாகும். முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

01) சுருக்கமான விடை எழுதுக.
1. பரி பவுல் எழுதிய இரண்டு கடிதங்களை தருக.
2. ஆதித் திருச்சபையில் காணப்பட்ட நற்பண்புகள் 2 தருக.
3. இயேசு ஓய்வு நாளைக் குறித்து கூறிய வார்த்தை யாது?
4. இயேசுவின் சீடர்கள் செய்த அற்புதங்கள் இரண்டு தருக.
5. நோவானிடம் காணப்பட்ட நற்பண்புகள் 2 தருக.
6. சீடர்கள் தூய ஆவியை பெற்ற தினம் எது?
7. போதை பொருட்களை பாவிப்பதால் ஏற்படும் தீய விளைவுகள் 2 தருக.
8. நவீன தொழில் நுட்பத்தினால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக.
9. இயேசுவின் சீடர்கள் இருவரை குறிப்பிடுக.
10. பெற்றோருக்கு செய்யக்கூடிய உதவிகள் இரண்டு தருக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

02) 1. உயிர்த்த இயேசு விண்ணேற்றமடையும் வேளையில் சீடர்களுக்கு கூறிய அறிவுரை யாது?
2. அழகு வாயிலில் இருந்த நோயாளி யார்? அவரை சுகப்படுத்தியவர் யார்?
3. இயேசுவின் உறுதுணை நம்பிக்கை கொண்டு வாழ்வதற்கான வழிமுறைகள் 5 தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03) 1. இயேசு இவ்வுலகிற்கு வருகை தந்ததற்கான நோக்கம் யாது?
2. இயேசு தனது வாழ்வில் விண்ணப்பம் செய்த சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
3. கிறிஸ்தவ பிள்ளையாகிய நீர் இறைவனிடம் விண்ணப்பம் செய்த சந்தர்ப்பங்கள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04) 1. எமது நாட்டின் கல்வித் திட்டத்திற்காக பாரிய சேவையாற்றிய குருவானவர் யார்?
2. இயேசுவை பின்பற்றும் எம்மிடம் இருக்க வேண்டிய நற்பண்புகள் இரண்டு தருக.
3. கிறிஸ்தவ பிள்ளையாகிய நீர் உமது சமூகத்திற்கு செய்யக்கூடிய நற்செயல்கள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05) 1. ஊனியல்பின் செயல்கள் இரண்டு தருக.
2. குடிப்பதனால் ஏற்படும் தீய விளைவுகள் இரண்டு தருக.
3. இளம் தலைமுறையினரை போதைபொருள் பாவணையில் இருந்து மீட்கக்கூடிய வழிகள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06) 1. நீதி மொழிகள் மூன்று எழுதுக.
2. நவீன தொடர்பு சாதனத்தினால் ஏற்படும் தீய விளைவு மூன்று தருக.
3. நவீன தொடர்பு சாதனங்களை நன்மையான செயல்களுக்கும் இறைபணிக்கும் பயன்படுத்த கூடிய வழிகள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07) பின்வருவனவற்றில் எவையேனும் 2 சிறுகுறிப்பு எழுதுக.
1. வேதாகமம்
2. நல்லாயன்
3. தாவீது அரசன்
4. ஸ்தேவான்

(2 x 5 = 10 புள்ளிகள்)

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** - கிறிஸ்தவம்

Christian விடைப்பத்திரம் - தரம் - 9

பகுதி – I

1. 3
2. 2
3. 1
4. 1
5. 3
6. 3
7. 3
8. 2
9. 3
10. 2
11. 2
12. 4
13. 3
14. 3
15. 2
16. 3
17. 4
18. 2
19. 1
20. 2

பகுதி – II

(01)

1. உரோமர், கெரிந்தியர்
2. ஜெபம், ஐக்கியம்
3. ஓய்வு நாள் மனிதனுக்கு கூட்டப்பட்டதே அல்லாமல் மனிதன் ஓய்வு நாளுக்கு கட்டுப்பட்டவன் அல்ல.
4. நோய்களை குணமாக்கல், பிசாசுகளை துறத்துதல்.
5. நீதி, நேர்மை
6. பெந்தகோஸ்தே
7. பொருத்தமான விடைகளுக்கு புள்ளி வழங்குக.
8. பொருத்தமான விடைகளுக்கு புள்ளி வழங்குக.
9. யாக்கோபு, யோவான்
10. பொருத்தமான விடைகளுக்கு புள்ளி வழங்குக.

(02)

1. எருசலேம் தொடங்கி யூதேயா, சமாரிய உலகத்தின் முடிவு பரியத்தம் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்.
2. கால் ஊனமுற்றவர், பேதுரு, யோவான்.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

(03)

1. மனிதர்களை பாவத்தில் இருந்து மீட்பதற்கு.
2. - சீடர்களை தெரிவு செய்ய முன்.
   - அற்புதங்களை செய்வதற்கு முன்.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

(04)

1. ஜேம்ஸ் எச். டொல் போதகர்
2. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

(05)

1. பாடப்புத்தகம் 49ம் பக்கம்.
2. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

(06)

1. பாடப்புத்தகம் 58ம் பக்கம்
2. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

(07) தலைப்பிற்கு பொருத்தமான வேதாகமத்தை அடிப்படையாக கொண்டு எழுதப்படின் புள்ளி வழங்குக.